www.Padasalai.Net

# இளையவர் - மூத்தோர் ஊதிய முரண்பாடு நீக்குதல்

**இளையவர் - மூத்தோர் ஊதிய முரண்பாட்டை நீக்குவதற்கான அடிப்படை தகுதிகள்.**

பணி மூப்பு பட்டியலின்படி மூத்த நிலையில் இருக்க வேண்டும். முரண்பாடு உருவானதாக கருதப்படும் நாளன்று மூத்த நிலையில் உள்ளவர் ஈடான அல்லது அதிக ஊதியம் பெற வேண்டும்.

பணி அமர்வு Rank-ல் மூத்த நிலையில் இருப்பதாலேயே மூத்த நிலையில் உள்ளவர்கள் இளையவருக்கு ஈடாக ஊதியம் ஈடு செய்ய கோர முடியாது இளையவர் ஊக்க ஊதிய உயர்வு பெற்றதால் கூடுதல் ஊதியம் பெறலாம். அல்லது மூத்த நிலையில் உள்ளவர் தண்டனை / ஊதியமில்லா விடுப்பு / தற்காலிகப் பணி நீக்கம் போன்ற நேர்வுகளில் ஊதிய உயர்வினை இழந்திருக்கலாம். இதனால் மற்ற நிலையில் இருப்பவர் Rank - அடிப்படையில் இளையவருக்கு ஈடாக ஊதியம் உயர்த்திக் கோர முடியாது.

ஊதிய முரண்பாடு சரி செய்வதற்கு பணி வரன்முறை செய்யப்பட்டிருக்க வேண்டிய

www.Padasalai.Net

தேவையில்லை - அரசுக் கடித எண்.77032/அ.வி.1/93-2இ ப.ம.நி.சீ. துறை நாள்.15.01.93.

ஊதிய முரண்பாடு நீக்கம் செய்யப்பட்ட ஆணையின் நகல் இடையில் உள்ள அனைத்து அலுவலருக்கும் அனுப்ப வேண்டும். அரசுக் கடித எண்.54507/அ.வி.1/85-6 ப.ம.நி.சீ. துறை நாள்.23.01.86.

அலுவலகத் தலைவரே ஊதிய முரண்பாடுகளை சரி செய்து ஆணையிட முடியாது. துறைத்தலைவர் ஆணை வழங்கிவிட்டு அரசின் பின்னேற்பைப் பெற வேண்டும். அரசாணை எண்.896 ப.ம.நி.சீ. துறை நாள்.10.05.86இ அரசாணை எண்.20 பணியாளர் துறை நாள்.20.01.95.

ஓய்வு பெற்றவர் / பெறுபவர் உடைய ஊதிய முரண்பாடு சரி செய்தால் அரசின் ஆணை பெற்ற பின்னர்தான் பணப்பலன் வழங்க வேண்டும். அரசு கடித எண்.23978/ஓய்வு/87-6 நிதித்துறை நாள்: 18.08.87.

ஊதிய முரண்பாடு சரிசெய்த பின்னர் இளையவர் ஊதிய உயர்வு பெறும் நாள் முதல்தான் முதுநிலையாளருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும்.

## முன்கூட்டு ஊதிய உயர்வுகள் *(Advance Increment)* பெறுவதால் ஏற்பட்ட ஊதிய முரண்பாடு சரி செய்தல்

மூத்த நிலையில் உள்ளவர் வரையறுக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றதால் முன்கூட்டியே ஊதிய உயர்வு பெற்று இருப்பார். இளையவர் சில நாட்கள்/ மாதங்கள்/ ஆண்டுகள் கழித்து முன்கூட்டு ஊதிய உயர்வு பெறுகிறார். இதனால் இளையவர் கூடுதலாக ஊதியம் பெற நேரலாம். இந்த முரண்பாட்டை பணிநியமன அலுவலரே சீர் செய்து ஆணையிடலாம். இதற்கு அரசின் பின்னேற்பு தேவை அரசாணை எண்.320 ப.ம.நி.சீ. துறை நாள்: 02.04.90இ அரசு கடித எண்.31978/ஆ2/99-4 ப.ம.நி.சீ. துறை நாள்.08..12.99, இது 02.10.70 முதல் நடைமுறை - அரசாணை எண்.710, நிதித்துறை நாள்:23.02.94.

## முதுநிலையாளருக்கு பின்னர் பதவி உயர்வு பெறுகிற இளையவர் கூடுதலாக ஊதியம் பெறுதல்

அ) பணிமூப்பின் படி மூத்த நிலையில் உள்ளவருக்கு பதவி உயர்வு கிடைக்கிறது. FR22(B)ன்படி ஊதிய நிர்ணயம் செய்யப்படுகிறது. சில நாள் கழித்து இளையவருக்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேல் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற்ற பிறகு பதவி உயர்வு கிடைக்கிறது. அவருக்கும் FR22(B)ன் படி ஊதிய நிர்ணயம் செய்யப்படுகிறது. இதனால் இளையவர் கூடுதலாக ஊதியம் பெற நேரிடுகிறது. இந்நேர்வில் ஊதிய முரண்பாடு உருவாகும் நாள் முதல் மூத்த நிலையில் உள்ளவரின் ஊதியத்தை இளையவருக்கு ஈடாக உயர்த்தி ஊதிய முரண்பாட்டினை சரி செய்யலாம். கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக் குட்பட்டது. இது Ruling 2 under FR.22(B).

1. முரண்பாடு உருவாகும் நாளன்று மூத்த நிலையில் இருப்பவர் இளையவருக்கு ஈடாக அல்லது அதிகமாக ஊதியம் பெற வேண்டும்.

www.Padasalai.Net

2. இருவரும் ஒரே Time Scale-ல் இருக்க வேண்டும்.
3. FR22(B) ன் படி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) ஊதிய முரண்பாட்டினை ஈடு செய்த பின்னர் மூத்த நிலையில் இருப்பவருக்கு வழக்கமான நாளன்று ஊதிய உயர்வு கிடைக்காது. இளையவர் ஊதிய உயர்வு பெறும் நாளில்தான் கிடைக்கும்.

இ) அரசின் பின்னேற்பினை எதிர்நோக்கி துறைத்தலைவர் இம்முரண்பாட்டினை சரி செய்து ஆணையிடலாம்.

**பதவி உயர்வு பெறும் இருவர் மாறுபட்ட ஊதிய நிர்ணய விதிகளின்படி ஊதிய நிர்ணயம் செய்து கொள்வதால் ஏற்படும் ஊதிய முரண்பாட்டினை சரி செய்தல்.**

அ) மூத்த நிலையில் இருப்பவர் பதவி உயர்வு நாளன்றே FR22(B)ன் படி ஊதிய நிர்ணயம் செய்து கொள்கிறார். இளையவர் பதவி உயர்வு நாளன்று FR22(1)(a)(1)ன் படியும், ஊதிய உயர்வு நாளன்று FR22(B)ன் படியும் ஊதிய நிர்ணயம் செய்து கொள்கிறார். இதனால் இளையவர் கூடுதலாக ஊதியம் பெற வாய்ப்புண்டு. முரண்பாடு உருவாகும் நாளன்று இளையவருக்கு இணையாக முதுநிலையாளரின் ஊதியத்தை உயர்த்தி முரண்பாட்டினை சரி செய்யலாம். அரசின் பின்னேற்பினை எதிர்நோக்கி துறைத்தலைவர் ஆணை வழங்க வேண்டும். அரசாணை எண்.808 ப.ம.நி.சீ. துறை நாள்.14.08.88. இந்நேர்வில் ஒரே ஊதியம் உள்ள பதவிக்கு உயர்வு பெற வேண்டும். மாறுபட்ட Scale-க்கு பதவி உயர்வு எனில் ஊதியம் ஈடுசெய்யக் கோர முடியாது.

ஆ) பிறிதொரு நேர்வில் கீழ்ப் பதவி மற்றும் உயர்பதவியின் Time Scale ஒன்றே. முன்னரே பதவி உயர்வு பெற்ற மூத்த நிலையாளர் பதவி உயர்வுக்கென ஒரு ஊதிய உயர்வு பெற்றுக் கொள்கிறார். பின்னர் பதவி உயர்வு பெறுகின்ற இளநிலையாளர் பதவி உயர்வு நாளன்று ஊதிய நிர்ணயம் செய்து கொள்ளவில்லை. மாறாக வழக்கமான ஊதிய உயர்வு நாள்வரை காத்திருந்து இரண்டு ஊதிய உயர்வுகளைப் பெற்றுக் கொள்கிறார். இதனால் இளையவர் கூடுதலாக ஊதியம் பெற நேரிடுகிறது. இந்நேர்வில் முரண்பாடு உருவாகும். நாள் முதல் இளையவருக்கு ஈடாக முதுநிலையாளரின் ஊதியத்தை உயர்த்தி முரண்பாட்டினை சரி செய்யலாம். அரசின் பின்னேற்பினை எதிர்நோக்கி துறைத்தலைவர் இதற்கான ஆணை வழங்க வேண்டும். அரசாணை எண்.145 ப.ம.நி.சீ. துறை நாள்.19.04.91. அரசாணை எண்.288 ப.ம.நி.சீ. துறை நாள்: 31.10.34.

**மூத்த நிலையில் உள்ளவர் தேர்வு நிலைக்கு செல்வதற்கு முன் பதவி உயர்வும், இளநிலையாளர் தேர்வு நிலைக்குச் சென்ற பின்னர் பதவி உயர்வும் பெறுவதால் ஏற்படும் ஊதிய முரண்பாடு சரி செய்தல்.**

அ) மூத்த நிலையாளருக்கு தேர்வு நிலை செல்வதற்கு முன்னரே பதவி உயர்வு கிட்டி

www.Padasalai.Net

விடுகிறது. இளநிலையாளருக்கு தேர்வு நிலைக்குச் சென்றபின் பதவி உயர்வு கிட்டுகிறது. இதனால் ஊதிய முரண்பாடு உருவாகிறது. இந்நேர்வில் ஊதிய முரண்பாடு நாள் முதல் முதுநிலையாளரின் ஊதியத்தை இளநிலையாளருக்கு ஈடாக உயர்த்தி ஆணையிடுவதின் மூலம் இதனை சரி செய்யலாம். அரசின் பின்னேற்பினை எதிர்நோக்கி துறைத்தலைவர் இதற்கு ஆணையிடலாம். இளையவர் ஊதிய உயர்வு பெறும் நாள் முதல் முதுநிலையாளருக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். அரசாணை எண்.151, ப.ம.நி.சீ. துறை நாள்.20.02.82.

**மூத்த நிலையில் உள்ளவர் சிறப்புநிலை பெறுவதற்கு முன்பே பதவி உயர்வு பெறுகையில் இளநிலையாளர் சிறப்பு நிலைக்குச் சென்ற பின்னர் பதவி உயர்வு பெறுவதால் ஏற்படும் ஊதிய முரண்பாட்டினை சரிசெய்தல்**

அ) மூத்தவர் சிறப்புநிலை அடையாமல் பதவி உயர்வு பெறுகிறார். இளையவர் சிறப்பு நிலைக்குச் சென்றபின் பதவி உயர்வு பெறுகிறார். இதனால் இளையவருக்கு இரண்டு ஊதிய நிர்ணயங்கள் பெறுகிற வாய்ப்பு கிடைப்பதால் இவர் கூடுதலாக ஊதியம் பெற நேரிடுகிறது. இந்நேர்வில் மூத்தவருக்கு ஏற்படும் இழப்பிற்கு ஈடான தொகைக்கு மூத்தவரின் ஊதியத்தை உயர்த்தி இழப்பை சரி செய்யலாம் - அரசுக் கடித எண்.77470/அ.வி.1/97-9 ப.ம.நி.சீ துறை நாள்.24.07.98.

ஆ) அரசின் பின்னேற்பினை எதிர்நோக்கி துறைத்தலைவர் இம்முரண் பாட்டினை சரிசெய்து ஆணையிடலாம் - அரசுக் கடிதம் எண்.77470/அ.வி.1/97-9, ப.ம.நி.சீ. துறை நாள்.24.07.98.

**மூத்தவர் ஆறாவது ஊதியக் குழுவிற்கு முன்னரும் இளையவர் ஆறாம் ஊதியக்குழுவிற்குப் பின்னரும் தேர்வுநிலை அல்லது சிறப்பு நிலை பெறுவதால் ஏற்படும் ஊதிய முரண்பாட்டினை நீக்குதல்.**

அ) இந்நேர்வில் அரசுக் கடித எண்.49918/அ.வி.4/2001-4, ப.ம.நி.சீ. துறை நாள்.10.09.01-ல் சொல்லப்பட்டுள்ளபடி முரண்பாட்டினை சரி செய்ய வேண்டும். ஊதியம், தனி ஊதியம் இரண்டும் சேர்த்து இளநிலையாளர் கூடுதலாக பெறும் தொகையை முதுநிலையாளருக்கு தனி ஊதியமாக அனுமதிக்க வேண்டும். பணி நியமன அதிகாரி இதற்கு ஆணையிடலாம்.

முரண்பாடு சரி செய்யப்பட்ட பிறகு அடுத்த ஊதிய உயர்வு ஓராண்டு கழிந்த பிறகு முதுநிலையாளருக்கு வழங்க வேண்டும்.

ஆ) அதே போன்று 01.01.96-க்குப் பிறகு இளநிலையாளர் தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்டு கூடுதல் தனி ஊதியம் பெறுவதால் ஏற்படும் ஊதிய முரண்பாட்டினையும் சரி செய்யலாம் - அரசுக் கடித எண்.72349/PC/2000 நிதித்துறை நாள்.21.01.01. இந்நேர்விலும் மூத்தவருக்கு ஓராண்டு கடந்த பின்னர்தான் அடுத்த ஊதிய உயர்வு வழங்கப்படும்.

www.Padasalai.Net

**ஆறாம் ஊதியக்குழுவின்படி ஊதிய நிர்ணயம் செய்வதால் இளையவர் கூடுதலாக ஊதியம் பெறும் முரண்பாடு**

ஆறாம் ஊதியக்குழுவின்படி ஊதிய நிர்ணயம் செய்யப்படும் பொழுது இளையவர், முதுநிலையாளர் இருவருக்கும் ஒரே ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இளையவருக்கு முன்னதாகவே ஊதிய உயர்வு நாள் வருவதால் அவர் கூடுதலாக ஊதியம் பெற நேரிடுகிறது. இந்நேர்வில் மூத்தவருக்கும் அதே நாளில் ஊதியத்தை உயர்த்தி ஆணையிட வேண்டும். இதனை பணி அமர்வு அதிகாரி செய்ய வேண்டும். ஊதியம் ஈடுசெய்யப்பட்ட பிறகு ஓராண்டு கடந்த பின் மூத்தவருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும் - Rule-5(1) of G.O.Ms.No.162 Finance dt.13.04.98.

**பணியில் மூத்தோர் இளையோர் ஊதிய முரண்பாடு களைதல் தொடர்பாக தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் தெளிவுரை-2009**

1) ஆசிரியர்களைப் பொறுத்த வரை ஒவ்வொரு ஒன்றியமும் ஓர் அலகாகும். இணையான ஒரே பதவியில் ஒரே அலகில் நியமனம் பெற்று பணிபுரியும் ஆசிரியர்கள் ஊதிய முரண்பாடு ஏற்படும் நாளுக்கு முன்னர் மூத்தோர் நிலையில் உள்ளவர், இளையோராக உள்ள ஆசிரியர்க்கு இணையாகவோ அல்லது கூடுதலாகவோ ஊதியம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு மூத்தோர் இணையான / கூடுதலாக ஊதியம் பெறவில்லையெனில் ஊதிய முரண்பாடே இல்லை என்று முடிவு செய்யப்பட வேண்டும்.

2. பணியில் மூத்தோர் மருத்துவச்சான்றில்லா ஊதியமில்லா விடுப்பில் சென்றால், இவ்விடுப்பிற்கு ஈடான காலத்திற்கு ஊதிய உயர்வு கிடைக்காது. இந்நிகழ்வில் இளையோர்க்கு இணையான ஊதியம் கோர இயலாது.

3. இளையவர் கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்க ஊரிய உயர்வுகள் பெற்றிருந்தால் முதுநிலையில் உள்ளவர் இளையவருக்கு இணையான ஊதியம் கோர இயலாது.

4. ஊதிய முரண்பாடு சரி செய்யப்பட்டபின் மூத்தோர்க்கு அவரது வழக்கமான நாளில் ஊதிய உயர்வு கிடைக்காது. இளையவர் ஊதிய உயர்வு பெறும் நாளில் மூத்தோர்க்கு வழங்கப்படும். (அ.க.எண்.19688/பிசி/92-2 நிதித்துறை நாள்: 22.1.1993).

5. ஆறாவது ஊதியக்குழுவின்படி ஊதிய நிர்ணயம் செய்யப்படும் பொழுது, பணியில் இளையவர் புதிய ஊதிய விகிதத்திற்கு விருப்பம் தெரிவிக்கும் தேதியை மாற்றி, அதனடிப்படையில் அதிக ஊதியம் பெற நேரிட்டால் மூத்தவரின் ஊதியத்தை இளையவரின் ஊதியத்திற்கு நிகராக நிர்ணயிக்கலாம்.

6. பணியில் மூத்தவர் மற்றும் இளையவரின் பணிப்பதிவேடுகள், பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம், நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் ஊதிய முரண்பாடு ஏற்படும் நாள் வரையிலான ஒப்புநோக்குப்பட்டியல் பெற்று அவற்றை நன்கு ஆய்வு செய்து நியமன அலுவலர் உரிய ஆணை வழங்குதல் வேண்டும்.

www.Padasalai.Net

7. ஒப்பு நோக்குப்பட்டியலில் பணியில் மூத்தவர் மற்றும் இளையவர் பணியில் சேர்ந்த நாள் முதல் முரண்பாடு ஏற்படும் நாள் வரை ஆண்டு தோறும் பெற்ற ஊதியம், ஊதிய உயர்வுகள், தேர்வுநிலை, சிறப்புநிலை, உயர் கல்வித்தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகள், பதவி உயர்வுக்குப் பிறகு ஊதிய நிர்ணயம் மற்றும் ஊதியக்குழு ஊதிய நிர்ணயம் ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

8. பணியில் மூத்தவரும் இளையவரும் ஒத்த பணி நிலையைச் சார்ந்திருந்து பணியில் மூத்தவர் சாதாரண நிலை ஊதிய விகிதத்தில் பணியாற்றுகையில் பதவி உயர்வு பெறுகிறார். இளையவர் சாதாரண நிலை ஊதிய விகிதத்தில் பணியாற்றி தேர்வு நிலை தகுதி பெற்ற பின்பு மூத்தவர் பெற்ற அதே பதவி உயர்வு பெற்று ஊதிய நிர்ணயம் செய்யப்படுவதால் ஏற்படும் முரண்பாட்டை அரசாணை எண்:151 பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, நாள்:10.02.82–ன் படி மூத்தவரின் ஊதியத்தை இளையவருக்கு இணையாகச் சமன் செய்து ஆணையிடலாம்.

9. மூத்தவர் தனது பதவியில் ஊதிய உயர்வு பெறும் நாளுக்கு முன்னரே உயர் பதவி உயர்வு பெற்றும், இளையவர் தனது கீழ்நிலைப் பதவியில் ஊதிய உயர்வு பெற்று பின்னர் பதவி உயர்வு பெற்றும் ஊதியம் நிர்ணயம் செய்வதால் ஏற்படும் ஊதிய முரண்பாட்டை அ.வி.22(பி) து.வி.2–ன்படி சரி செய்யலாம்.